**செய்தி வெளியீடு எண்: 471** **நாள்: 06.08.2019**

# செய்தி வெளியீடு
# வணிகவரி மற்றும் பதிவுத்துறை

நாட்டிலுள்ள அனைத்து சில்லறை வியாபாரிகள், சிறுகடை உரிமையாளர்கள் மற்றும் சுயதொழில் செய்பவர்களில் ஆண்டுக்கு ரூ.1.5 கோடிக்கு மிகாமல் விற்று முதல் செய்பவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க மத்திய அரசு பிரதம மந்திரி லகு வியாபாரி மான்தான் என்ற திட்டத்தினை 22.07.2019 முதல் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தினை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக 06.08.2019 அன்று மத்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சக ஏற்பாட்டின் பேரில், மத்திய அரசின் உயர் அலுவலர்களுடன் மாநில அரசின் வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் அரசு முதன்மைச் செயலாளர், கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறையின் செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளின் உயர் அலுவலர்களுடன் காணொலி காட்சி (Video Conferencing) மூலம் விவாதிக்கப்பட்டது. இந்த திட்டத்தில் 18 முதல் 40 வயதுள்ள வியாபாரிகள் இணைந்து கொள்ளலாம். இதன் மாதாந்திர குறைந்தபட்ச சந்தா வயதிற்கேற்றாற்போல் ரூ.55 என்றும் அதிகபட்ச சந்தா ரூ.200 என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கு இணையான தொகையை மத்திய அரசு செலுத்தும். உறுப்பினர்கள் அறுபது வயதை அடைந்தவுடன் உறுதி செய்யப்பட்ட குறைந்தபட்ச ஓய்வூதியமாக ரூ.3,000/– மாதந்தோறும் வழங்கப்படும். ஓய்வூதியதாரர் இறக்கும்பட்சத்தில், அவரின் கணவர்/மனைவிக்கு ஓய்வூதியத்தில் 50 சதவிகிதம் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும். இத்திட்டத்தில் மாநிலம் முழுவதும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை ஆகிய துறைகளின் கீழ் வரும் சில்லறை வியாபாரிகள், சிறுகடை உரிமையாளர்கள், சுயதொழில் செய்பவர்கள் மற்றும் முறைசாரா தொழில் செய்பவர்கள் பயன்பெறுவர். மேற்படி சில்லறை வியாபாரிகள், சிறுகடை உரிமையாளர்கள், சுயதொழில் செய்பவர்கள் மற்றும் முறைசாரா தொழில் செய்பவர்கள் தங்களது பெயர்களை 09.08.2019 முதல் https://locator.csccloud.in/ என்ற இணையதள முகவரியில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுச்சேவை மையங்களை அணுகி பதிவு செய்து கொள்ளலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**